

# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..!

## கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி பயிற்சி

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலுடன் தி.மு.க. இளைஞர் அணி நடத்திய **'என் உயிரினும் மேலான..!'** என்ற பிரமாண்ட பேச்சுப் போட்டியில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். முதல் கட்டமாக, மாவட்ட அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் 913 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அடுத்த கட்டமாக மண்டல அளவிலான போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு திராவிட இயக்கப் பேச்சாளர்களைக்கொண்டு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

29.09.2024 ஞாயிறு அன்று நடைபெறும் இந்தப் பயிற்சி முகாம் குறித்த விவரம் வருமாறு:

**29-09-2024, ஞாயிற்றுக்கிழமை**

| வ. எண் | வருவாய் மாவட்டம் | பயிற்சி நடைபெறும் இடம் | பயிற்சியாளர்கள் | நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | சென்னை, செங்கல்பட்டு | ஜெயின் மகளிர் கல்லூரி, பேருந்து நிலையம் அருகில், தியாகராய நகர், சென்னை-17. | கோவி.செழியன், மருத்துவர் எழிலன், கோவி.லெனின், மருத்துவர் யாழினி, ஜீவசகாப்தன் | எஸ்.ஜோயல் |
| 2 | விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், புதுச்சேரி | சூர்யா கல்விக் குழும கல்லூரி, விக்கிரவாண்டி, விழுப்புரம்-52. | பொன். முத்துராமலிங்கம், சூர்யா சேவியர், மதுரை பாலா, டான் அசோக், சூர்யா கிருஷ்ணமூர்த்தி | ப.அப்துல் மாலிக் |
| 3 | காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, வேலூர் | எ.வ.வேலு மகளிர் மேல்நிலைப் பள்ளி, வேட்டவலம் சாலை, திருவள்ளுவர் நகர், திருவண்ணாமலை-1. | நாஞ்சில் சம்பத், சி.வி.எம்.பி.எழிலரசன், உமா, சௌமியன், மகிழ்நன் | க.பிரபு |
| 4 | நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் | சப்தகிரி பொறியியல் கல்லூரி, சேலம்-பெங்களூரு நெடுஞ்சாலை, பெரியன்னஹள்ளி, தருமபுரி-5. | வழக்கறிஞர் அருள்மொழி, வே.மதிமாறன், அமுதரசன், பத்மப்ரியா, செந்தில்வேல், தமிழ் காமராசன் | பி.எஸ்.சீனிவாசன் |
| 5 | கரூர், திருப்பூர், கோவை, நீலகிரி, ஈரோடு | மகரிஷி வித்யா மந்திர் பள்ளி, ஈங்கூர், பெருந்துறை, ஈரோடு-52. | பேராசிரியர் சுப.வீரபாண்டியன், வழக்கறிஞர் சரவணன், மதிவதனி, இந்திரகுமார் தேரடி, பொள்ளாச்சி சித்திக் | கே.இ.பிரகாஷ் |
| 6 | அரியலூர், பெரம்பலூர், திருச்சி, திருவாரூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், காரைக்கால் | கரந்தை தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-கும்பகோணம் நெடுஞ்சாலை, சுந்தரம் பிள்ளை நகர், தஞ்சாவூர்-2. | முனைவர் சபாபதி மோகன், கவிதைப்பித்தன், வழக்கறிஞர் பரந்தாமன், மருத்துவர் ஹபீஸ், விஜயபாஸ்கர் | நா.இளையராஜா, சி.ஆனந்தகுமார் |
| 7 | திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், சிவகங்கை | அமெரிக்கன் கல்லூரி, அழகர் கோவில் பிரதான சாலை, தல்லாக்குளம், மதுரை-20. | கம்பம் செல்வேந்திரன், டி.செங்குட்டுவன், புதுக்கோட்டை விஜயா, மருத்துவர் ஷஃபி சுலைமான், சுகுணா திவாகர், 'புதுகை பூபாளம்' பிரகதீஸ்வரன், மில்டன் | ஜி.பி.ராஜா |
| 8 | திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், தென்காசி, தூத்துக்குடி | கீதாஜீவன் மெட்ரிகுலேஷன் பள்ளி, போல்பேட்டை, புதிய பேருந்து நிலையம் அருகில், தூத்துக்குடி-2. | கடலூர் புகழேந்தி, எஸ்.கே.பி.கருணா, கவிஞர் சல்மா, வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, வரவணை செந்தில், ராஜகம்பீரன் அப்பாஸ் | இன்பா ஏ.என்.ரகு |

**பயிற்சியில் கலந்துகொள்வோர் கவனத்திற்கு**

* பயிற்சியில் கலந்துகொள்ள வருபவர்கள், கல்லூரி / அலுவலக அடையாள அட்டை, ஆதார் கார்டு போன்ற ஏதேனும் ஓர் அடையாள அட்டையை எடுத்து வர வேண்டும். * பயிற்சி காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெறும். * காலை மற்றும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. * பயிற்சி தொடங்கும் நேரத்தில் பங்கேற்பாளர்கள் அரங்கத்தில் இருக்கவேண்டும். * பயிற்சியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் தங்களுடன் பெற்றோர் அல்லது உறவினர் ஒருவரை துணைக்கு அழைத்து வரலாம்.

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 25–09–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

### தி.மு.க. - வி.சி.க. இடையே

# எந்தவித விரிசலும் இல்லை- சலசலப்பும் இல்லை!

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. பேட்டி!

கோவை, செப்.26-

"தி.மு.க., வி.சி.க, இடையே எந்தவித விரிசலும் இலலை, சலசலப்பும் இல்லை" என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. கூறியுள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி நேற்று கோவை வந்தார். கோவை விமான நிலையத்தில் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

தி.மு.க. மற்றும் விடுதலை சிறுத்தைகள் ஆகிய 2 கூட்டணி கட்சிகளுக்கு இடையில் எந்த சலசலப்பும் இல்லை. விரிசலும் இல்லை. அப்படி விரிசல் உருவாகுவதற்கு வாய்ப்பும் இல்லை.

என்னுடைய ஊடக பக்கத்தில் பதிவான ஒரு சின்ன வீடியோ, ஆட்சியிலும் பங்கு, அதிகாரத்திலும் பங்கு என்ற கருத்தை விவாதத்துக்கு பலரும் எடுத்துக் கொண்டனர். அது மேலும் மேலும் விவாதத்துக்கு வழி வகுத்து விட்டது.

அதனால் தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் இடையில் எந்த சிக்கலும் எழாது. சிக்கலும் எழுவதற்கு வாய்ப்பு இல்லை.



இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**நடவடிக்கை இருக்கும்!**

'ஆதவ் அர்ஜூனா மீது ஆ.ராசா எம்.பி. நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறியிருக்கிறாரே? அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?' என நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு திருமாவளவன் பதில் அளித்து கூறும்போது, "கட்சியில் உள்ள முன்னணி தோழர்களோடு கலந்து பேசி தான் எந்த நடவடிக்கையும் இருக்கும். கட்சி விவகாரங்களை முன்னணி பொறுப்பாளர்கள், பொதுச்செயலாளர், உயர்நிலைக்குழுவில் இடம்பெற்றுள்ள தோழர்களுடன் தொலைபேசி மூலமாக பேசி இருக்கிறேன். மீண்டும் கலந்து பேசி நடவடிக்கை இருக்கும்" என தெரிவித்தார்.




சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 119வது வட்டம் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் தலைமையில், வே.கமலா செழியன் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு உரையாற்றினார் உடன் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் மருத்துவர் அ. சுபேர்கான், ஆர்.என்.துரை, வி.என்.ராஜன், ரவி, ராஜ்குமார் மற்றும் வட்டச் செயலாளர் க.வே.மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி வட்டத்திற்குட்பட்ட பாரிவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெருமாள்பட்டு, திருநின்றவூர் திருத்தணி வட்டம், அகூர் ஆவடி வட்டம், தாசர்புரம் என ரூ.2.57 கோடி செலவில் 5 புதிய மருத்துவ கட்டிடங்கள் அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், ஆர்.காந்தி ஆகியோர் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்து ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டில் பேருந்து வசதி ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் அறுவை சிகிச்சை உபகரணங்களும், 500 காச நோயாளிகளுக்கு ஊட்டச்சத்துக்காக ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் செல் கவுண்டர் வசதி 9 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகமும், 3 பயனாளிகளுக்கு கண்ணொளி கண் கண்ணாடிகளை வழங்கினார்கள் உடன் மாவட்ட ஆட்சியர் பிரபு சங்கர், மருத்துவமனை முதல்வர் ரேவதி, சுகாதார அலுவலர்கள் பி. பிரியாராஜ் ஜெ பிரபாகரன் இணை இயக்குனர் மீரா, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், மாவட்ட ஊராட்சி குழு துணை சேர்மன் டி.தேசிங்கு, ஒன்றிய சேர்மன் எம்.ஜெயக்குமார், ஒன்றிய துணை சேர்மன் பரமேஸ்வரி கந்தன் ஊராட்சி மன்ற தலைவர் வி.தணிகாசலம், நிர்வாகிகள் சன்.பிரகாஷ், ஜி.ஆர்.திருமலை, விஜெ.சீனிவாசன், எம். முத்தமிழ் செல்வன், பொன்.விமல், வி.குமார், துணைத் தலைவர் ராஜா உள்பட மருத்துவத் துறை அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.